**குழித்துறை நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 25-11-2022 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்

1) மார்த்தாண்டம் பேருந்து நிலையம் முன்பக்கம் நம்ம மார்த்தாண்டம் என பெயர் வைத்து அழகுபடுத்த மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 316 தீர்மானிக்கப்பட்டது.

9-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எம்.பி. ரவி கொண்டு வரும் தீர்மானம்

1) குழித்துறை கல்லுக்கெட்டி சாலையில் மாவிடுவிளை திருப்பில் நிற்கும் இலவமரம் மிகவும் ஆபத்தான நிலையில் பெயர்ந்து விழும் நிலமையில் உள்ளது. இது போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும், மின்சார வாரியத்திற்கும் மிகவும் சிரமத்தையும், நஷ்டத்தையும் ஏற்படுத்தும் ஆகையால் இம்மரத்தினை முறித்து அகற்றுவதற்கு வருவாய் கோட்டாட்சியாளர் அவர்களை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 317 - (1) தீர்மானிக்கப்பட்டது.

2) குழித்துறை விளவங்கோடு சாலையில் மேலே சாணிவிளை செல்லும் சாலை திருப்பில் போக்கூரத்துக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருக்கும் சிறுபாறையை அதன் அருகாமையில் இருக்கும் சிறுபாறைகற்களையும் அகற்றுவதற்கு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 317 - (2) தீர்மானிக்கப்பட்டது

3) குழித்துறை விளவங்கோடு சாலையில் குழித்துறை சந்திப்பு முதல் மடிச்சல் சாலை திருப்பு வரை போடப்பட்டுள்ள பேவர் பிளாக் பதிக்கப்பட்டுள்ள இடத்தில் பல பகுதிகளில் பள்ளங்கள் ஏற்பட்டு மழைத்தண்ணீர் தேங்கி நிற்கும் நிலமை ஏற்பட்டுள்ளது. இதனால் போக்குவரத்துக்கும், பொது மக்களுக்கும் மிகவும் கஷ்டத்தை ஏற்படுத்துகின்றது. ஆகையினால் அவற்றை சரி செய்ய மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 317 - (3) தீர்மானிக்கப்பட்டது

<u>14-வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. . லில்லி புஷ்பம் கொண்டு வரும் தீர்மானம்</u>

1) <u>ஒடை சரி செய்து மூடிபோட</u>: ஆனி பானு மண்டபம் முதல் தொடங்கி கிறிஸ்துராஜ் கோயில் வரை உள்ள ஒடையை சரி செய்து அதை மூடி போட மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண். 318 - (1) தீர்மானிக்கப்பட்டது.

2) <u>தெருவிளக்கு</u>: காமான்டுவிளையில் செல்லும் பாதையில் இரண்டு மின்கம்பத்தில் மின் விளக்கு போட மன்றம் தீர்மானிக்கலாம்

மன்றத்தீர்மான எண். 318 - (1) தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.1</u>

குழித்துறை நகராட்சி பகுதியில் உள்ள வீடுகள் மற்றும் கட்டிடத்திலிருந்து கழிவுநீரினை, மழைநீர் வடிகாலில் விடுவதை தவிர்ப்பது மற்றும் பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை பொது இடங்களில் கொட்டுவதை தவிர்ப்பது குறித்த விளம்பரத்தினை 02-10-2022-ம் தேதி தினகரன் தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.9,975 தினகரன் நாளிதழிடமிருந்து வரப்பெற்றுள்ளது.

1) தினகரன் - ரூ. 9,975

மேற்படி வரப்பெற்ற தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அ.கு.:-</u> மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3767/2022/எச்1.

மன்றத்தீர்மான எண். 319 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.2</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்பம்மம் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Bio-mining Process மூலம் அப்புறப்படுத்துவதற்கான பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி 29-09-2022 அன்று நடைபெறும் விவரத்தினை தினசரி செய்தி நாளிதழில் மாநில அளவில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு MAA Communication Ltd., Chennai-600010 என்ற நிறுவனத்திடம் இருந்து பட்டியல் தொகை ரூ.19635/- வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1230/2018/இ1.

மன்றத்தீர்மான எண். 320 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட கடைகள் குத்தகை உரிமம் முடிவுற்றும், நடத்த இயலாமையாலும் ஒப்படைக்கப்பட்ட கடைகளுக்கு மறு ஏலம் விடப்பட்டு உரிமம் பெற்றவர்களுக்கு உரிமம் ஒப்படைக்கப்பட்ட பின்னரும் கணினியில் மீண்டும் கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது.

I. மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் உள்ள கடைகள் E- பிளாக்

| வ.எண் | பெயர் மற்றும் கடை எண் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. மஸ்தான் - E1 | 1,05,000 |
| 2 | திரு. முகமது கசன் - E2 | 1,05,000 |
| 3 | திரு. சித்திக்மேனன் - E3 | 1,05,000 |
| 4 | திரு. உசேனார்பிள்ளை - E4 | 1,05,000 |
| 5 | திரு. ஜெயச்சந்திரன் - E6 | 1,05,000 |

II. மார்த்தாண்டம் காய்கறி சந்தையில் உள்ள கடைகள் C- பிளாக்

| வ.எண் | பெயர் மற்றும் கடை எண் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.N. ஆர்வின்ராஜ் - C42 | 54,280 |
| 2 | திரு.N. ஆர்வின்ராஜ் - C43 | 54,280 |
| 3 | திரு.T.R. ரமேஷ் - C4 | 2,30,856 |
| 4 | திரு.T. கிறிஸ்டோபர் - C5 | 2,33,082 |
| 5 | திரு.C. கிறிஸ்டோபர் - C6 | 2,25,944 |
| 6 | திரு.C. முருகன் - C7 | 2,38,348 |

III. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடைகள் B- பிளாக்

| வ.எண் | பெயர் மற்றும் கடை எண் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.A. லாசர் - B2 | 1,05,500 |
| 2 | திரு.D. சுனிதா - B12 | 1,26,120 |
| 3 | திரு.C. ஐடா - B3 | 2,20,806 |
| 4 | திரு.ஜெசிமி - B13 | 2,33,200 |

IV. மார்த்தாண்டம் பேருந்து நிலையம் கடைகள் A- பிளாக்

| வ.எண் | பெயர் மற்றும் கடை எண் | தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு.T. வைகுண்டமணி - A10 | 3,13,306 |
| 2 | திரு.R. ரமேஷ்குமார் - A13 | 1,88,968 |

மேற்படி மூன்றாண்டு வரப்பெற்றுள்ள கேட்பினை கீழ்கண்ட முறைகளின்படி ரத்து செய்து புதிதாக உரிய நபருக்கு ஆண்டு வாரியாக கேட்பு எழுப்பலாம்.

I. வரிசை எண்.I-ல் குறிப்பிட்டுள்ள இனங்கள் அனைத்தும் 2020-2021-ம் ஆண்டுடன் உரிமம் ரத்து செய்யப்பட்டு (மாடுவதை கூடம் தற்காலிகமாக புதிய கட்டுமான பணிகளுக்காக மூடப்பட்டது) தற்சமயம் 2021-2022-ம் ஆண்டிற்கான கேட்பு கூடுதலாக எழுப்பப்பட்டுள்ளமையால் கூடுதல் கேட்பினை ரத்து செய்யலாம்.

II. வரிசை எண்.II-ல் கண்டுள்ள இனங்கள் குத்தகை உரிமைதாரர்களால் பணம் செலுத்திட இயலாமையால் கடை பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது எனினும் ஆண்டுதோறும் எழுப்பப்படும் கேட்பின் போது கூடுதலாக மூடப்பட்ட கடைகளுக்கு கேட்பு எழுப்பப்பட்டுள்ளதால் கேட்பினை, ரத்து செய்யலாம்.

III. வரிசை எண்.III-ல் குறிப்பிட்டுள்ள இனங்களுக்குரிய குத்தகை உரிமைதாரர்கள் கடையினை (கோவிட் பெருந்தொற்று கால கட்டத்தில்) காலி செய்துள்ள நிலையில் வருடாந்திர கேட்பு எழுப்பப்பட்ட நிலையில் அவர்களது உரிமம் இல்லாத காலத்திற்கான கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்ட கேட்பினை ரத்து செய்யலாம்.

IV. வரிசை எண்.IV-ல் குறிப்பிட்டுள்ள இனங்கள் கோவிட் பெருந்தொற்று ஏற்படும காலத்திற்கு குறுகிய காலத்திற்குள் குத்தகைக்கு எடுத்து இருமாதங்களில் கடை நடத்த முடியாமல் கடையினை ஒப்படைத்து வைப்புத்தொகையினை பறிமுதல் செய்யப்பட்ட பின்னரும் கேட்பு எழுப்பப்பட்டதை ரத்து செய்யலாம்.

<u>அ.கு.:-</u> மேற்பட்ட இனங்களில் நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் இல்லாமையால் கேட்பினை ரத்து செய்ய மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண். 321 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.4</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஏலம் போகாத இனமான வெட்டுவெந்நி சந்திப்பில் இருந்து சப்பாத்து செல்லும் சாலையில் உள்ள கடை மற்றும் மீன்சந்தை கட்டணம் வசூல் செய்யும் உரிமமானது திரு. பாபுராஜ் என்பவரால் 2021-2022-ம் ஆண்டு வரையில் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்த நிலையில் உரிமம் முடிவுற்று தற்சமயம் துறை மூலமாக வசூல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திரு. ராஜமணி என்பவர் அக்குத்தகை இனத்தினை ரூ.1,25,000/-க்கு ஏலம் எடுத்து கொள்வதாகவும் அதற்குரிய வைப்புத்தொகை ரூ.60,000/-ம் செலுத்தியுள்ளார். மேற்படி இனத்தினை குத்தகை உரிமம் வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

மேற்படி குத்தகை இனம் சென்ற வருட குத்தகை தொகையாக ரூ.3,88,500/-க்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. தற்சமயம் ஏலம் எடுத்திட எவரும் முன்வரவில்லை. தனியார் பேருந்துகள், கனரக வாகனங்கள், முன்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் அதிக வசூல் ஆகியுள்ளது. தற்போது வாகனங்கள் வராததால் மேற்படி இனமானது குறைந்த தொகைக்கு குத்தகைக்கு கேட்கப்பட்டுள்ளது. துறை ரீதியான வசூல் மூலம் தினசரி ரூ.700/- வசூல் செய்யப்பட்டு வருகிறது. (700x365=255500) இதில் பணியாளரின் தினசரி ஊதியம் ரூ.540/- (540x365=197100) எனவே வரவு செலவினை கருத்தில் கொண்டு இவ்வினத்திற்கு உரிமம் வழங்கிட மன்றம் முடிவு செய்யலாம்.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2

மன்றத்தீர்மான எண். 322 - மறுஏலம் கேட்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தை கடை எண்.D5 கடை வாடகை செலுத்தாததால் பூட்டிசீல் வைக்கப்பட்டுள்ளது. தற்சமயம் பூட்டிய நிலையில் உள்ளது. திரு. சேவியர் பாபு என்பவர் அக்கடையினை மாதவாடகை ரூ.10,100/-க்கு கேட்டுள்ளார். அத்துடன் ரூ.50,000/-க்கான வைப்புத் தொகையினையும் செலுத்தியுள்ளார். அக்கடையானது 2021-2022-ம் நிதியாண்டிற்கு ரூ.17,100/-க்கு குத்தகைக்கு விடப்பட்டு குத்தகைக்கு எடுக்கப்பட்ட நபரால் வாடகை தொகை செலுத்த இயலாமையால் சீல் வைக்கப்பட்டு செயல்படாமல் உள்ளது. எனவே நிதியிழப்பினை தவிர்க்கும் பொருட்டு மேற்படி கடை உரிமம் வழங்குவது தொடர்பாக மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.3066/2021/அ2.

மன்றத்தீர்மான எண். 323 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சிப் பகுதியில் வார்டு எண்.16, 19, 21 ஆகிய வார்டுகளில் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள வணிக நிறுவனங்கள் சுமார் 20 வருடங்களுக்கு முன் தொழில்வரி விதிப்பு செய்யப்பட்டு, தற்போது வரை கேட்பு எழுப்பப்பட்டு வருகிறது. மேற்படி வணிக நிறுவனங்களை நேராய்வு செய்யப்பட்டதில் கேட்பு எழுப்பப்பட்ட நாள் முதல் பல்வேறு காரணங்களால் தற்போது வரை செயல்படாமல் உள்ளது.

எனவே வரி தொகை நிலுவையாக உள்ளது. எனவே மேற்படி வரிவிதிப்பு எண்களுக்கு எதிரே குறிப்பிட்டுள்ள காரணங்களுக்காக வசூல் செய்ய இயலவில்லை. எனவே இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளபடி ரூ.511157/-ஐ தொழில்வரி கேட்பிலிருந்து.

வார்டு எண். 16 - 12719
வார்டு எண். 19 - 141229
வார்டு எண். 21 - 357209
----------------
மொத்தம் 511157
----------------

நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் முடிவு செய்யலாம்.
**ந.க.எண்**.2965/2021/அ1.

மன்றத்தீர்மான எண். 324 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வெட்டுவெந்நி பி.பி.முனுசாமி வணிகவளாகத்தில் உள்ள கடை எண்.G7-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.P. முகமது முஸபாத் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைப்புத் தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங் கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | திரு.P. முகமது முஸபாத் | 2018-2019 | G7 | 1,57,576 | Page No.258, Sl.No.216, 217, 218 |

**ந.க.எண்**.3416/2022/அ2.

மன்றத்தீர்மான எண். 325 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.8

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவு வாகனம் TN.75J.8227-ற்கு 2022-2023-ம் ஆண்டிற்கான தகுதி சான்று பெறுவது முன்னிட்டு ரூ.4225/- திரு.என். விஜயகுமார், நகராட்சி ஒட்டுநர் அவர்களால் வட்டார போக்குவரத்து துறைக்கு செலவிடப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை அன்னாருக்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.2778/2012/இ1.

மன்றத்தீர்மான எண். 326 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.9

குழித்துறை நகராட்சி ஒராண்டு சாதனை திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை தினசரி செய்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1) தீக்கதிர் - ரூ.9800/-
2) இந்து தமிழ் - ரூ.9975/-

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றம் முடிவு செய்யலாம்.
ந.க.எண்.1379/2019/இ1.

மன்றத்தீர்மான எண். 327 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் அமைந்துள்ள குழித்துறை பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள பொது கழிப்பிடம் சீரமைக்கும் பணிகள் தொடர்பாக திரு. கிருஷ்ணன் என்பவரால் மதுரை உயர்நீதி மன்றத்தில் W.P.(MD) No.23813/2022, நாள் 7-11-2022 அன்று நடைபெற்றது. அது தொடர்பாக அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு. வீராகதிரவன் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட நகராட்சி வழக்கறிஞர் திரு.பி. ஆதிமூலபாண்டியன் அவர்கள் ஆஜரான வகைக்கு ஊதிய கட்டணம் ரூ.40,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.4099/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 328 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.11</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8-ல் அமைந்துள்ள குழித்துறை பேருந்து நிலையம் அருகாமையில் உள்ள பொது கழிப்பிடம் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளுவது தொடர்பாக திரு. கிருஷ்ணன் என்பவரால் மதுரை உயர்நீதி மன்றத்தில் 14-10-2022 அன்று வழக்கு எண்.W.P.(MD) No.23104 of 2022 தொடரப்பட்ட வழக்கனது நீக்கம் செய்யப்பட்டு திரும்ப பெறப்பட்டது. மேலும் அது தொடர்பாக ஆஜரான கன்னியாகுமரி மாவட்ட நகராட்சி வழக்கறிஞர் திரு.பி. ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு ஊதிய கட்டணம் ரூ.10,000/- நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.
ந.க.எண்.4099/2022/இ1.

மன்றத்தீர்மான எண். 329 - அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்.12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN.75M.8752-ற்கு 2022-2023-ம் ஆண்டு வரை தகுதி சான்று பெறும் பொருட்டு வாகனத்திலுள்ள பழுதுகளை நீக்கம் செய்ய ரூ.1,40,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு 27-10-2022 அன்று ஒப்பந்தப்புளளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்கண்டவாறு.

1) Ganesh Motor works 0.17% மதிப்பீட்டை விட குறைவு
2) Mathavan Mortors 17.99% மதிப்பீட்டை விட அதிகம்

மேற்படி பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ganesh Motor works என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- பொது சுகாதார பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ganesh Motor works நாகர்கோவில் என்ற நிறுவனத்திற்கு பணியினை மேற்கொள்ள வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்..
ந.க.எண்.284/2013/இ1.

மன்றத்தீர்மான எண். 330 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.13

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.74Z.7843-ஐ முதிரநிலையில் கழிவு செய்து விற்பனை 10-11-2022 அன்று நடைபெற்ற ஏலத்தில் 12 நபர்கள் கலந்து கொண்டனர். அரசாங்க மதிப்பு தொகையாக ரூ.68,000/- + 18% GST-ற்கு ஏல கேள்வி கேட்கப்பட்டதில் உச்ச ஏல கேள்வி தொகையாக ரூ.83,190/-ற்கு திரு.W.Y. ஷாஜிலால் கேட்டுள்ளார். எனவே உச்ச ஏலகேள்வி தொகை கோரிய திரு.W.Y. ஷாஜிலால் அவர்களுக்கு TN.74Z.7843 வாகனத்தை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3033/2011/இ1.

மன்றத்தீர்மான எண். 331 - அனுமதிக்கப்பட்டது.

பொருள் எண்.14

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான வாகனம் TN.74Z.7843-ஐ முதிரநிலையில் கழிவு செய்து விற்பனை செய்ய ஏல அறிவிப்பினை தினசரி செய்தி நாளிதழில் பிரசுரம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.5964/- தினத்தந்தி நாளிதழில் இருந்து வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.- மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.
ந.க.எண்.3033/2011/இ1.

மன்றத்தீர்மான எண். 332 - அனுமதிக்கப்பட்டது.

ஒப்பம்/-திரு.பொன்.ஆசைத்தம்பி,
நகர் மன்ற தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.